சுருக்கம்

படித்து வேலை வேண்டி தமிழ்நாட்டில் உள்ள வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்து வேலை கிடைக்காமல் உள்ள இளைஞர்களுக்கு உதவித்தொகை வழங்கும் திட்டத்தின் கீழ் உதவி தொகை உயர்த்தி வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (ஆர்.2) துறை

அரசாணை (நிலை) எண்: 19

நாள்: 20.02.2017,
துன்முகி மாசி 8,
திருவள்ளுவராண்டு 2048.

மீண்டும் படிக்கப்பட்டது.

1. அரசாணை (நிலை) எண்.72, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்(ஆர்2)துறை, நாள் 25.08.2006.
2. அரசாணை (நிலை) எண்.215, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்(ஆர்2)துறை, நாள் 25.10.2010.

மேலும் படிக்கப்பட்டது

3. வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை இயக்குநரின் கடித எண்.வே.உ.1/14223/2016, நாள் .02.2017.

-----

ஆணை:

மாண்புமிகு தமிழக முன்னாள் முதலமைச்சர் அம்மா அவர்கள் 2016 பொதுத் தேர்தல் அறிக்கையில் கீழ்க்கண்ட வாக்குறுதியை அளித்துள்ளார்கள்.

> “வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்து வேலை கிடைக்காமல் உள்ள இளைஞர்களுக்கு உதவித்தொகை வழங்கும் திட்டத்தின் கீழ் பத்தாம் வகுப்பு முடித்தவர்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகை 300 ரூபாய் எனவும், 12 ஆம் வகுப்பு முடித்தவர்களுக்கு 400 ரூபாய் எனவும், பட்டதாரிகளுக்கு 600 ரூபாய் எனவும் உயர்த்தப்படும்”.

2. மேற்கண்ட தேர்தல் வாக்குறுதியின் அடிப்படையில், மேலே 3–ல் படிக்கப்பட்ட வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை இயக்குநர் அவர்களின் கடிதத்தில் மேலே 1–ல் படிக்கப்பட்ட அரசாணையில் வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்து குறைந்த பட்சம் 5 வருடம் நிறைவு செய்து காத்திருக்கும் பத்தாம் வகுப்பு, பன்னிரெண்டாம் வகுப்பு, பட்டப்படிப்பு ஆகிய கல்வித்தகுதிகள் கொண்ட வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான உதவித் தொகைத் திட்டமானது செயல்பட்டு வருகிறது என்றும், மேலே 2–ல் படிக்கப்பட்ட அரசாணையில் இத்திட்டமானது பள்ளி இறுதி தேர்வில் தேர்ச்சி பெறாத பதிவுதாரர்களுக்கும் நீட்டிக்கப்பட்டது என்றும் தெரிவித்துள்ளார். இத்திட்டத்தின் கீழ் பயன்பெற தேவையான அடிப்படை தகுதிகள் பின்வருமாறு தெரிவித்துள்ளார்.

1. தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் 45 வயது வரையிலும், ஏனையோர் 40 வயது வரையிலும் என்ற உச்ச வயதுவரம்புக்குட்பட்டு மூன்றாண்டுகளுக்கு மட்டும் உதவித்தொகை வழங்கப்படுகிறது.

2. பயனாளிகள் வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்து உயிர்ப்பதிவேட்டில் குறைந்த பட்சம் ஐந்தாண்டு காலம் காத்திருக்க வேண்டும்.

3. பயனாளிகளது குடும்ப வருமானம் ரூ.50,000/–த்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.

4. அரசு / தனியார் துறையில் பணிபுரிபவராகவோ அல்லது சுய தொழில் செய்பவராகவோ இருக்கக்கூடாது. பள்ளி கல்லூரிகளுக்கு அன்றாடம் சென்று கல்வி பயிலும் மாணவ மாணவியராக இருக்கக்கூடாது.

5. பதிவுதாரரின் பெயரில் தேசீய மயமாக்கப்பட்ட வங்கியில் சேமிப்பு கணக்கு துவக்கி அதன் விபரத்தை சமர்ப்பிக்க வேண்டும்.

6. வருமானம் உள்ளிட்ட இதர அம்சங்கள் குறித்த ஒருங்கிணைந்த சான்றிதழ் வருவாய்த்துறையில் பெற்று சமர்ப்பிக்கப்பட வேண்டும். இது தவிர ஒவ்வொரு நிதியாண்டு துவக்கத்திலும் “பணியில் இல்லை” என்பதற்கான சுய உறுதி மொழி ஆவணம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

3. கடந்த 10 ஆண்டு காலமாக இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் உதவித்தொகை அளவானது உயர்த்தப்படாமல், அதே அளவில் தொடர்கிறது என்றும் இளைஞர்களுக்கிடையே போட்டித் தேர்வுகள் மற்றும் திறன் மேம்பாடு பயிற்சிகள் குறித்த விழிப்புணர்வு அதிகரித்து விண்ணப்பிக்கும் ஆர்வம் பெருகியுள்ளது என்றும் வேலைநாடுநர்களின் ஆர்வத்தை ஊக்குவிக்கும் விதமாகவும் போட்டித்தேர்வுக்கான கட்டணங்கள் மற்றும் இதர பயிற்சிகளுக்கான கட்டண செலவினங்களுக்காகவும் இந்த உதவித் தொகையினை உயர்த்தி வழங்கினால் இத்திட்டமானது இளைஞர்களுக்கிடையே மிகுந்த வரவேற்பைப் பெறும் என்றும் மேலும் இத்திட்டத்தின் பயன்கள் அதிக அளவில் பயனாளிகளை சென்றடைவதோடு பயனாளிகளின் எண்ணிக்கையும் பன்மடங்கு அதிகமாகும் என எதிர்பார்க்கப்படுகிறது என்றும் வேலை வாய்ப்புத்துறை இயக்குநர் தெரிவித்துள்ளார்.

4. தற்போது வழங்கப்படும் உதவித்தொகை மற்றும் உயர்த்தி வழங்க கோரும் உதவித்தொகை விபரம்:-

| வ.எண் | கல்வித்தகுதி | தற்போது வழங்கப்படும் உதவித் தொகை அளவு | உயர்த்தி வழங்க கோரும் உதவித்தொகை அளவு |
|---|---|---|---|
| 1 | பத்தாம் வகுப்பு தோல்வி | ரூ.100/– | ரூ.200/– |
| 2 | பத்தாம் வகுப்புத் தேர்ச்சி | ரூ.150/– | ரூ.300/– |
| 3 | மேல்நிலைக் கல்வித் தேர்ச்சி | ரூ.200/– | ரூ.400/– |
| 4 | பட்டப்படிப்பு/பட்ட மேற்படிப்பு | ரூ.300/– | ரூ.600/– |

5) மேற்குறிப்பிட்டுள்ளவாறு வேலைவாய்ப்பற்றோர் உதவித் தொகை உயர்த்தி வழங்கப்பட்டால் பயனாளிகளின் எண்ணிக்கை கூடுதலாகும் நிலையில் செலவின விவரம் இன வாரியாக பின்வருமாறு.

| வ. எண் | இனம் | கணக்குத் தலைப்பு | 2016-2017 ம் நிதி ஆண்டு | | 2017–2018ம் நிதி ஆண்டு |
|---|---|---|---|---|---|
| | | | பயனாளிகள் எண்ணிக்கை | செலவின விவரம் ரூபாய் (இலட்சங்களில்) (பிப்ரவரி 2017 மற்றும் மார்ச் 2017) | உத்தேச நிதி தேவை ரூபாய் (இலட்சங்களில்) |
| 1 | தாழ்த்தப் பட்ட வகுப்பினர் | DPC.No.2235-60-789-JD-0935 | 16850 | 141.51 | 933.89 |
| 2 | பழங்குடி வகுப்பினர் | DPC.No.2235-60-796-JD-0930 | 249 | 2.02 | 22.92 |
| 3 | இதர வகுப்பினர் | DPC.No.2235-60-800-AX-0938 | 38129 | 324.94 | 2144.54 |
| | மொத்தம் | | 55228 | 468.46 | 3101.35 |

6. நடப்பாண்டில் பிப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களுக்கு ரூபாய் 4.68 கோடியும் வரும் நிதியாண்டில் இத்திட்டத்திற்கு ரூபாய் 31.02 கோடியும் செலவாகும் எனவும் இது தற்போது ஆண்டுக்கு ஆகும் செலவினம் ரூபாய் 16.50 கோடியைவிட இருமடங்காகும் எனவும் மேலும் ஒவ்வொரு ஆண்டும் 10 சதவிகிதம் கூடுதல் நிதி தேவைப்படும் எனவும் தெரிவித்து அதற்கான நிதியையும் கோரியுள்ளார்.

7. மேற்கண்ட சூழ்நிலையில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை இயக்குநர் அவர்களின் கருத்துருவினை கவனமாக பரிசீலனை செய்து நடப்பாண்டில் பிப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களுக்கு ரூபாய் 4.68 கோடியும் வரும் நிதியாண்டில் இத்திட்டத்திற்கு ரூபாய் 31.02 கோடியும் ஒப்புதல் அளித்து வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு உதவித் தொகையை உயர்த்தி வழங்கி ஆணையிடுகிறது.

8. மேலே ஒப்பளிக்கப்பட்ட தொகை கீழ்காணும் கணக்குத் தலைப்புகளின் கீழ் பற்று வைக்கப்படும்.

<u>தாழ்த்தப்பட்ட வகுப்பினர் – கணக்குத்தலைப்பு</u>

2235 social Security and Welfare-06-Other Social Security and Welfare Programmes -789 Special Component for **Scheduled Castes**-Schemes in the 12$^{th}$ Five year Plan-II. State Plan JD Payment for Relief to the Unemployed Youth under Special Component Plan. **(DPC.No.2235-60-789-JD-0935)**

<u>பழங்குடி வகுப்பினர் – கணக்குத்தலைப்பு</u>

2235 social Security and Welfare-06-Other Social Security Welfare Programmes -796 **Tribal area Sub-Plan-Scheme** in the 12th Five year Plan-II. State Plan JD Payment for Relief to the Unemployed Youth under Tribal SUB- Plan. **(DPC.No.2235-60-796-JD-0930)**

<u>இதர வகுப்பினர் – கணக்குத்தலைப்பு</u>

2235 social Security and Welfare-06-Other Social Security and Welfare Programmes -800 Other Expenditure-Non Plan. AX Payment of Relief to the Unemployed Youth. **(DPC.No.2235-60-800-AX-0938)**

9) இவ்வரசாணை நிதித்துறையின் இசைவினை அத்துறையின் அ.சா.கு.எண்.596/கூடுதல் தலைமைச் செயலாளர்(நிதி) /2017, நாள் 20.02.2017–ல் பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பெ.அமுதா,
அரசு செயலாளர்.

பெறுநர்
இயக்குநர், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை, சென்னை –32.
மாநில கணக்காயர் (கணக்குகள் மற்றும் உரிமைத் தொகை/(துணிக்கை)
சென்னை–18.
சம்பந்தப்பட்ட சம்பள கணக்கு அலுவலர்கள்.

நகல்
மாண்புமிகு முதலமைச்சரின் அலுவலகம், சென்னை–9.
மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9.
நிதி(தொ (ம) வே.வா/வ.செ.பொ-II) துறை, சென்னை–9.
செயலரின் தனிச் செயலர், தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத்துறை, சென்னை–9.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்